Tamilmanam International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed monthly academic research journal

ISSN: 3049-0723 (Online)
3107-7781 (Print)

தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
Monthly Peer-Reviewed Open Access Crossref Google Scholar
SJIF Impact Factor3.5 Multidisciplinary International

Issue DOI: https://doi.org/10.63300/tm12032026

UGC Approved by Transparent Peer Review

Vol. 12 No. 03 (2026): August 2026, **p210-220**| Available online: www.tamilmanam.in

Original Research Paper

இரா.லோகம்பாளின் "எழுமின் விழிமின்" என்னும் நூலில் சமுதாய வெளிப்பாடுகள்

Societal expressions in R. Logambal's book "Ezhumin Vizhimin".

முனைவர் ஆ. அடைக்கலராஜ்,
உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை,
தூய வளனார் கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி - 620 002
அலைபேசி : 9489638722. adaikkalaraj_ta1@mail.sjctni.edu

Dr. A. Adaikkalaraj*,
Assistant Professor, Department of Tamil Studies,
St. Joseph's College (Autonomous),
Tiruchirappalli - 620 002
Mobile: 9489638722, Email: adaikkalaraj_ta1@mail.sjctni.edu.

Article history
Received: 25-07-2026
Revised: 29-07-2026
Accepted: 31-07-2026

*Corresponding Author Email:
adaikkalaraj_ta1@mail.sjctni.edu
Tel: 9489638722

Abstract: A school serves as a beacon of light that refines the individual, enhances intellectual capacity, and guides one toward excellence in character and conduct. The Tamil schools established by the Tamil community in Malaysia act as seeds sown to ensure that the Tamil language—one of the world's ancient languages—flourishes like the sprawling banyan tree and takes deep, resilient root like the hardy Bermuda grass. These schools shine as repositories that preserve not only the Tamil language but also a wealth of distinctive elements, including Tamil arts, culture, traditions, heritage, religious philosophies, ethical values, and spiritual wisdom.

Keywords: *Tamil language, education, country, independence, progress, pride of Tamils, hard work, Tamil civilization, rubber industry.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).

© 2014 The Author(s). This open access article is distributed under a Creative Commons Attribution (CC-BY) license

ஆய்வுச் சுருக்கம்

ஒரு மனிதனைச் செம்மைப் படுத்தி, அவனது அறிவாற்றலைப் பெருக்கி, ஒழுக்கத்தாலும், பண்பாலும் உயர வழிகாட்டியாய் அமையும் ஒளிவிளக்கே பள்ளியாகும். ஊலகில் தோன்றிய பல மொழிகளைக் காத்திட, மலேசியத் தமிழர்கள் இந்நாட்டில் தோற்றுவித்த தமிழ்ப் பள்ளிகள், தமிழ்மொழி ஆல் போல் தழைத்து, அருகுபோல் வேரூன்ற, விதைக்கப்பட்ட விதைகளாகும். மலேசியாவில் தோற்றுவிக்கப்பட்ட தமிழ்ப் பள்ளிகள், தமிழ் மொழியோடு தமிழர்களின் கலைகள், கலாச்சாரம், பண்பாடு, பாரம்பரியம், சமயத்தின் தத்துவங்கள், நன்னெறிப் பண்புகள், ஆன்மீகச் சிறப்புகள் போன்ற பல்வேறு சிறப்பியல்புகளைத் தாங்கி நிற்கும் காப்பகங்களாய் மிளிர்கின்றன.

கலைச்சொற்கள்

தமிழ்மொழி, கல்வி, நாடு, சுதந்திரம், முன்னேற்றம், தமிழரின் பெருமை, உழைப்பு, தமிழர் நாகரிகம், ரப்பர் தொழில்.

முன்னுரை

மொழியே இனத்தின் அடையாளம். மொழிக் காப்பே இனக் காப்பாகும். தமிழகத்திற்கு அடுத்த நிலையில் மலேசியாவில் தமிழ் மொழி கட்டிக் காக்கப்படுகிறது எனற் பெருமையோடு தலை நிமிர முடிகிறது. இப்படி இம்மண்ணில் சுட்டிக் காக்கப்படுகிறது என்ற மாண்பு மலேசிய தமிழ்ப் பள்ளிகளையும் சாறும். தமிழ்ப்பள்ளிகளுக்குத் தம் குழந்தைகளை அனுப்பி வைப்பது மட்டுமின்றி மொழிப் பற்றை வெளிக் கொணர வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். மலேசியத் தமிழர்கள் தமிழ்மொழியையும் சமயத்தையும் காப்பது முதன்மையாகக் கொள்கின்றனர். இளையோரின் விழிப்புணர்வு, நிதி நிர்வாகம், தமிழ்ப்பள்ளிகளின் நிலவரம் முதலியவற்றைத் தெளிவு படுத்துகிறது. இவரது படைப்புகளில் மொழி, இனம் மற்றும் சமயத்தைக் காக்கத் தவறும் போது தமது மாண்பு இம்மண்ணில் சிதைவுறும் என்பன உள்ளிட்ட கருத்துக்களைப் பின்வருமாறு காணலாம்.

மலேசிய தமிழ்ப் பள்ளிகள்

2013ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டில் 18,100, மாணவர்கள் தமிழ்ப் பள்ளிகளில் சேர்ந்தனர். 2014 ஆம் ஆண்டில் 13,679- ஆக மாணவரின் எண்ணிக்கை குறைந்தது. 2015இல் மேலும் சரிவு தொடர்ந்தது. இந்நிலை நீடித்தால் அடுத்த இருபது ஆண்டுகளில், தமிழ்ப் பள்ளிகளே இல்லாத நிலையை நாமே உருவாக்கும் அவலம் ஏற்படும். இதுவும் ஓர் இன ஒழிப்பேயாகும். இது பிறர் நமக்குத் தோண்டிய புதைகுழி அன்று!. மாறாக நமக்கு நாமே தோண்டிய புதைகுழியாகும்! தமிழ்ப் பள்ளிகள் இல்லாவிடில் தமிழ்மொழியும், தமிழினமும் இங்கு அழியும், மதிக்கப்பட்ட இனமாய் வலம்வந்த நாம், மிதிக்கப்பட்ட இனமாய்ப் புறந்தள்ளப்படுவோம்.

"தமிழர்க்குத் தமிழே உயிராம் - அந்தத்
தமிழுக்குத் தமிழனே தூக்குக்கயிறாம்"

என்று மலேசியக் கவிஞர் க.பெருமாள் பாடியதை, தமிழரே மெய்யாக்கி வருவதை அறிய முடிகிறது.

திறமையான மாணவர் தமிழ்ப்பள்ளியில் கணிதமும், அறிவியலும் படித்தாலும் தொடர்ந்து இடைநிலைப் பள்ளியில் அப்பாடங்களை ஆங்கிலத்திலோ தேசிய மொழியிலோ பயிலும்போது, அவர்களால் சிறந்த மாணவராய் வெற்றி பெறுகின்றனர். பெற்றோர் இதனை உணரத் தவறியதும், தமிழ்ப் பள்ளி மாணவர்களின் சேர்க்கையில் தொய்வு ஏற்பட ஒரு காரணியாய் அமைவதை நூலாசிரியர் தெளிவுபடுத்துகிறார்.

மலேசியாவில் இடைநிலைப் பள்ளிகளில் படிவம் 3, 5 மற்றுமு; 6 இல் தமிழைச் சோதனைப் பாடமாக எடுப்போரின் எண்ணிக்கை பெருந் தொய்வை எதிர்நோக்குகிறது. இங்கு தமிழாசிரியர் பற்றாக்குறையும் ஏற்பட்டு பின்னர் தாமதமாகவே இதற்கு தீர்வு காணப்படுகிறது. மலாயா பல்கலைக்கழகத்தில் இந்திய ஆய்வியல் துறைக்கு விண்ணப்பம் செய்வோரின் தொகையும் குறைகிறது. பல்கலைக்கழகத்தில் பவனி வந்த தமிழுக்கு மூடுவிழா காணப்படும் நிலை ஏற்படுவதை

நூலாசிரியர் வருத்தத்துடன் பதிவு செய்கிறார். 2020 தொலைநோக்குக் கொள்கையை அடையவும், மிகச் சிறந்த மனித மூலத்தை வடிவமைக்கவும் மலேசியக் கல்வித் திட்டம் திகழ்கிறது என்பதில், எள்ளவும் ஐயமில்லை. மலேசியாவின் குறுகிய வளர்ச்சிக்கு, அவர்களது கல்வித் திட்ட வடிவாக்கமும் காரணமாய் அமைந்துள்ளது. மேலும் அவ்வப்போது கல்வியமைச்சகத்தால் ஏற்படுத்தப்படும் பலவித மாறுதல்களால் நமது தமிழ்ப் பள்ளிகள் பலவித எதிர்விளைவுகளை எதிர் நோக்குகின்றன. எப்பள்ளியில் பிள்ளைகளைப் சேர்ப்பது? என்பதில் பெற்றோர் குழப்பமடையவும் இத்தகைய தருணங்களைப் பயன்படுத்தி, தமிழுக்கு எதிர்ப்புக் காட்டும் புல்லுருவிகளும் அவ்வப்போது தலைகாட்டுவதை வெளிப்படுத்துகிறார்.

2017ஆம் ஆண்டில் 2 மொழிக் கல்வித் திட்டம் எனும் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பள்ளிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்வழி முதல் வகுப்பில் கணிதம் மற்றும் அறிவியல் பாடங்களை மாணவர்கள், ஆங்கிலத்தில் கற்க முடியும். இத்திட்டத்தை வரவேற்போர், இதனால் மாணவர்களின் ஆங்கிலமொழி ஆற்றல் திறம்பெறும் என்றும், தமிழ்ப் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கையை இத்திட்டம் அதிகரிக்கும் எனவும் கூறுகின்றனர். ஆனால் இவை ஆதாரமற்ற கூற்றுகள் என்பதை இவர்கள் உணரவில்லை என்று நூலாசிரியர் சாடுகிறார்.

முதலாம் வகுப்பில் புதிதாகக் கணிதம், அறிவியல் பாடங்களை மூன்றாம் மொழியாகிய ஆங்கிலத்தில் கற்பித்தால், மாணவர்களால் சரிவரப் புரிந்து கொள்ள இயலாது. கணிதவியல் நுட்பங்களையும், அறிவியல் கோட்பாடுகளையும், தாய் மொழி வழியாகத்தான் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலும். கணிதம், அறிவியலில் மொழியைவிடத் தெளிவும், புரிதலுமே முக்கியம். அந்தத் தெளிவும், புரிதலும் குழந்தைகள் தமிழ்மொழிவழி கற்றால்தான் கிட்டும்.

தமிழ்மொழியில் கணிதம், அறிவியலைப் படிப்பவர்களுக்கு ஆய்வுச் சிந்தனை, எரணம், காரணவியல் புத்தாக்கச் சிந்தனை, முதலிய திறன்கள் மிகச் சிறப்பாக வளரும். ஊடக அளவில் அறிவியல் துறையில் வளர்ச்சி பெற்றுள்ள ஜப்பான், சீனா, ஜெர்மனி, ரஷ்யா, கொரியா போன்ற நாடுகளில் கணிதம், அறிவியல், மருத்துவம், தொழில்நுட்பம் ஆகியவை அவர்களின் தாய்மொழியில் கற்றுக்கொள்வதால் அவர்களின் அதிகமான கண்டுபிடிப்புகளும், ஆக்கங்களும் உருவாகியுள்ளதை நுட்பமாகப் பதிவு செய்கிறார்.

தமிழர் அனைவரும் சுயநலத்தை நீக்கி, ஒருமித்த கருத்துடன் செயல்படுவது அவசியமாகும். நாட்டில் நூற்றுக்கணக்கான தமிழ் சார்ந்த பொது இயக்கங்கள் உள்ளன. இவை தக்க காரணங்களை முன்னிறுத்தி, எதிர்ப்பு காட்ட வேண்டும். கல்வி அமைச்சகத்தில் பணியாற்றும் அதிகாரிகளும், தொடக்கப் பள்ளிகளில் கணிதம், அறிவியலைத் தாய்மொழியிலும், இடைநிலைப் பள்ளிகளில் ஆங்கிலத்திலும் படிப்பதற்குப் புதிய திட்டத்தைக் கொண்டு வர ஆவணம் செய்யப்பட வேண்டும். நம் அரசியல் தலைவர்களும், இதற்கு முழு மூச்சாய்ச் செயல்படுவது காலத்தின் கட்டாயம் என்பதை உணருதல் அவசியமாகும்.

“யாமறிந்த மொழிகளிலே, தமிழ் மொழி போல இனிதாவதெங்கும் காணோம்” எனத் தமிழைப் போற்றினார் பாரதியார்.

உலகெங்கும் தமிழர் இருக்கிறார்கள். ஆனால், மலேசியாவில் மட்டுமே தமிழராக வாழ்கிறார்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1965இல் மலேசிய வருகையின்போது கூறியதன் உட்பொருள், தமிழர் இங்கு வசதியாக வாழ்வது மட்டுமல்ல, தமிழோடு வாழ்வதையும் குறிப்பதாக உணர முடிகிறது.

Article DOI: https://doi.org/10.63300/tm12032026.17

உலகெங்கும் தமிழர் இருக்கிறார்கள். ஆனால், மலேசியாவில் மட்டுமே தமிழராக வாழ்கிறார்கள் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் 1965இல் மலேசிய வருகையின் போது கூறியதன் உட்பொருள், தமிழர் இங்கு வசதியாக வாழ்வது மட்டுமல்ல, தமிழோடு வாழ்வதையும் அறிந்துகாள்ள முடிகிறது.

உலகிற்கே நாகரிகம் கற்றுக் கொடுத்த இனம் நம்மினம், பண்பாடுகளாலும், பாரம்பரியத்தாலும், சமயத்தாலும் தலை நிமிர்ந்து வாழ்ந்த நாம், நம்மொழி இந்நாட்டில் நீடிக்க வழி காணாவிடில், நம் சந்தததியனர் வீழ்வதற்கு வழி காணாவிடில், நம் சந்ததியினர் வீழ்வதற்கு வழிகோலிட்டவர் ஆவோம். மேலும்,

“வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூ போலக் கெடும்”(குறள்: 435)

எனும் குறளையும் மெய்யாக்கி விடுவோம் என்று சூழுரைக்கிறார்.

தமிழ் காக்கப்பட வேண்டும் என எண்ணும் சிலர் தேசியப் பள்ளிகளில் தமிழ் கட்டாயமாக ஆக்கப்பட வேண்டும் என்பதில் உறுதியாயுள்ளனர். ஆனால், தேசியப் பள்ளிகளில் தமிழ் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பதைவிட இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் கட்டாயமாக்கப்பட்டால் அதனால் பல நன்மைகள் விளையும் என்பதை நாம் உணர வேண்டும். இடைநிலைப் பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடமாக ஆக்க வேண்டும் என்று கோரிக்கையை நம் தமிழ் சார்ந்த இயக்கங்களும், அமைப்புகளும் ஒன்றிணைந்து குரல் எழுப்ப வேண்டும். தமிழ்க் கல்விமான்களும், தமிழ் ஊடகங்களும் இக்கோரிக்கை செயலாக்கம் பெறுவதில் முனைப்புக் காட்டுவது அவசியமாகும். கல்வி அமைச்சின் தமிழ்த் துறை அதிகாரிகள் இக்கோரிக்கையை அவசியமானதாகக் கருதி, அதை அரசாங்கம் ஏற்றுச் செயல்படுத்துவதற்கு முழு மூச்சுடன் உழைத்தல் அவசியமானதாகும். தமது நோக்கத்தில் உறுதியுடையவராகச் செயல்படின் நிச்சயம் எண்ணியவற்றை, எண்ணியபடிச் சாதிக்கலாம், இதனயே,

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்”(குறள்: 666)

எனும் தமிழ் மறையும் உணர்த்துகிறது.

இடைநிலைப் பள்ளியில் தமிழ் கட்டாயமாக்கப்பட்டால் தேசியப் பள்ளியில் பயில்வதைவிட்டு, தமிழ்ப் பள்ளியில் பயிலும் மாணவரின் பெற்றோரும் தங்கள் பிள்ளைகள், இடைநிலைப் பள்ளியில் தமிழைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்பதால் அடிப்படைத் தமிழைத் தம் பிள்ளைகட்கு ஊட்ட ஆர்வம் கொள்வர். ஆகவே, தமிழ் மொழி போதிக்கும் ஆசிரியர்களின் தேவையும் இதனால் அதிகரிக்கும். இடைநிலைப் பள்ளி மாணவரும் தமிழை முறையாகப் பயிலவும், சோதனைப் பாடமாக எடுத்துத் தங்களின் மொழியாற்றலை வளர்த்துக் கொள்ள இயலும் என்பதனைத் தெளிவுபடுத்துகிறார்.

மலேசிய நாட்டு எழுத்தாளர்கள்

மலேசிய நாட்டின் தமிழ் எழுத்தாளர்கள், எழுத்தாளர் சங்கங்களில் தங்களை இணைத்து அவ்வப்போது தரமான படைப்புகளை நல்குகின்றனர். மலேசியாவில் தமிழ் எழுத்தாளர்களை உருவாக்குவதில் பெரும் பங்கு வகிப்பவை அந்நாட்டின் செய்தித்தாள்களே ஆகும். இவை செய்திகளைத் தருவதோடு, ஞாயிறு சிறப்பிதழ்கள் மூலம் இலக்கிய வளர்ச்சிக்கும் தோள் கொடுக்கின்றன. மலேசிய வானொலியின் இந்தியப் பிரிவும் தமிழ் எழுத்தாளர்களை உருவாக்கியுள்ளது, உருவாக்கியும் வருகிறது. தமிழ் எழுத்தாளர்களின் சீரிய முயற்சியால் அரிய வரலாறு, இலக்கியம் மற்றும் சமூக நாடகங்கள் வானொலியில் ஒலியேறுகின்றன. தற்போது பல இளம் எழுத்தாளர்களும், எழுத்துத் துறையில் முத்திரை பதிக்க முனைந்துள்ளனர்.

தமிழ்நாட்டு எழுத்தாளர்கட்கு ஈடாக நாவல்கள் படைத்துப் பரிசும், பாராட்டும் பெறுகின்றனர். முற்றவர்கள், இயக்கங்கள் நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டு, குறு நாவல், சிறுகதை, கவிதை மரபுக் கவிதை, புதுக்கவிதை, கட்டுரை போன்ற துறைகளில் தங்களின் படைப்புகளைப் படைத்து, இலை மறை காயாக உள்ள தங்களின் திறனை வெளிப்படுத்துகின்றனர். வார, மாத சஞ்சிகைகளுக்கு எழுதுவோரும் நிறையவே இலக்கியப் பணிகளை ஆற்றுகின்றனர். அதுமட்டுமல்ல நம் நாட்டில் தமிழ் சினிமாத் துறை உன்னத வளர்ச்சி கண்டு வருவதற்கு நம் தமிழ் எழுத்தாளர்கள் படைக்கும் சீரிய படைப்புகளே காரணம் என்றால் அது மிகையாகாது. மலேசியத் தமிழ் இலக்கத்தில் முத்திரை பதித்துள்ள எழுத்தாளர்களின் படைப்புகள் மி;குதியாகக் காணப்படுகின்றன. சிறுகதை உலகிலே சி.வடிவேலு, ரெ.கார்த்திகேசு, மு.அன்புச்செல்வன், எம்.குமாரன், சை.பீர்முகமது, சந்திரகாந்தம், வீ.தீனரட்சகி, ந.மகேஸ்வரி, கமலாட்சி ஆறுமுகம், எம்.ஜெயலட்சுமி, பாவை போன்றோரின் படைப்புகளில் மண்ணின் மணம் கமழுகின்றன. இவர்களைத் தவிர கவிஞர்கள் காரைக்கிழார், முரசு நெடுமாறன், சி.வேலுசாமி, இலக்குவனம், கிருஷ்ணதாசர், கெகாமாட்கிருஷ்ணன், ஐ.உலகநாதன் மற்றும் கா.பெருமாள், கரு.திருவரசு, சோணை முத்து, பெ.கோ.மலையரசன், புலவர்.முருகையன், ம.அ.சந்திரன், கொவதன், சங்கை ஜாலி சுப்பிரமணியம், தீப்பொறி பொன்னுசாமி போன்றோரின் படைப்புகளில் வேகம், துடிப்பு, சுட்டி மிடுக்கு, உணர்ச்சி ஆகிய அனைத்தும் ஒருசேரக் காணலாம். இவை தமிழகக் கவிதைகளுக்கு நிகராகவும் திகழ்கின்றன. நாவல்கள் எழுதுவோருக்குச் சிறந்த வெகுமதிகள் அளிக்கப்படுவதால் இத்துறையிலும் பலர் முத்திரை பதிக்க முனைந்துள்ளனர்.

மலேசிய தமிழ் எழுத்தாளர்கள் அறிவாற்றலும், செயல் திறனும் மிக்கவர்கள் ஆவர். இவர்கள் முயன்றால் தமது இனத்தவரின் உயர்வுக்கு ஏணிப்படியாக அமைய முடியும். தமிழ் எழுத்தாளர்கள் முதலில் தங்களையும், தங்கள் குடும்பத்தையும் முன்னோடியாக அமைத்துக் கொண்டு மற்றவர்களுக்கு வழிகாட்டக் காலடி எடுத்து வைக்க வேண்டும். தங்களின் குழந்தைகட்குத் தமிழ்ப் பற்றை வளர்த்து, நல்ல கல்வியை அளித்து, ஒழுக்க சீலர்களாய் அவர்களை வளர்க்க வேண்டும். நற்பண்புகளுடன் வளர்க்கபடும் பிள்ளைகள், தங்களைச் சுற்றியுள்ள பிள்ளைகட்கு உதாரணமாய்த் திகழ்வர் என்று எடுத்துரைக்கிறார்.

மலேசிய நாட்டு சங்கங்கள்

நம் நாட்டில் தற்போது நம் இந்தியரின் உயர்வுக்காகவும், விழிப்புணர்வுக்காகவும் நூற்றுக்கணக்கான அமைப்புகள் செயல்படுகின்றன. மலேசிய இந்து இளைஞர் இயக்கம், தமிழ் இளைஞர் மணிமன்றம், இந்திய வர்த்தகர் சங்கம், இந்திய மேம்பாடு இயக்கம், இந்தியர் விளையாட்டு இயக்கம், திராவிட முன்னேற்றக் கழகம், மலேசியப் பண்பாட்டு இயக்கம் போன்றவை திறம்பட இயங்குகின்றன. இவற்றைத் தவிர மலேசிய இந்து சங்கம், மலேசிய இந்து தர்ம மாமன்றம், தெய்வீக வாழ்க்கைச் சங்கம், மலேசிய இந்து தர்ம மாமன்றம், தெய்வீக வாழ்க்கைச் சங்கம், மலேசிய இந்து தர்ம மாமன்றம், தெய்வீக வாழ்க்கைச் சங்கம், மலேசிய சைவ சித்தாந்த சங்கம் போன்றவை சமய வளர்ச்சிக்காக பல்வேறு செயல்களைச் செய்து வருவதை நூலாசிரியர் விவரித்துள்ளார்.

மலேசிய படைப்புகள்

மலேசிய படைப்புகள் வாசிக்கத் தூண்டவல்ல இலக்கியப் படைப்புகளைச் சமுதாயத்திற்கும், தமிழுக்கும் படைத்து மறைமுகச் சேவை செய்யும் ஆற்றல் ஒவ்வொரு தமிழ் எழுத்தாளருக்கும் தனிச்சிறப்பானதாக அமைகிறது. தற்போதைய நமது இளம் எழுத்தாளர்கள் தமிழில் மட்டுமன்றி, ஆங்கிலம், மலாய் மொழிகளிலும் இலக்கியப் படைப்புகளைப் படைக்க வல்லவர்களாக உள்ளனர். இவர்கள் படைப்பாக்கம் மட்டுமன்று, புத்தாக்கத் திறன்களும் படைத்தவர்களும் ஆவர்.

இத்தகையோரின் ஒத்துழைப்போடு தமிழ் எழுத்தாளர்கள் தங்களின் நடவடிக்கைகளை மேம்படுத்திக் கொள்ள ஏதுவாக அமைகிறது. எழுத்தாளர்கள் எவ்வாறு தங்களைச் சார்ந்த மக்களுக்குச் சமுதாயப் பணி ஆற்றுகின்றனர்? அதன்வழி நாட்டின் வளர்ச்சிக்கு எவ்விதம் உதவுகின்றனர்? என்பதை ஆராயந்தறியலாம்.

வரலாறு மற்றும் கற்பனைக் கதைகள், நாவல்கள், துப்பறியும் நாவல்கள் படிக்கும் போது சிலர் கதாபாத்திரத்துடன் ஒன்றிணைந்து விடுவர். ஒரு சிலருக்கு அதைப் புரிந்து கொள்வதில் சற்றுக் குழப்பம் ஏற்படுவதுண்டு. இதனை எளிமைப்படுத்திக் கதையை ஆர்வமுடன் வாசிப்பதற்கு ஓர் அரிய முயற்சியில் ஈடுபட்டுள்ள இங்கிலாந்தைச் சேர்ந்து ஜுடி ஹார்லி என்ற பெண் கலைஞர் ஆவர். கதைப் புத்தகத்தில் இடம் பெறும் முக்கிய நாயகர்களின் உருவத்தைக் காகிதத்தில் தத்ரூபமாக அழகாகச் செய்து, அதைச் சம்பந்தப்பட்ட பக்கத்தில் இணைக்கிறார். இப்படி ஹாரிபாட்டர் உள்பட பல கதாபாத்திரங்களை அவர் உருவாக்கி, புத்தகத்தில் இடம் பெறச் செய்துள்ளார். இதன்மூலம் கதையைப் படிக்கும்போது மிகுந்த ஆர்வமும், மகிழ்வும் ஏற்படுவதாய் ஜுடி கூறுகிறார். மலேசிய எழுத்தாளர்கள் தமது இலக்கியப் பணிகளில் இவ்வாறு புதுமை வழிகளை கையாளலாம் என்று முன்மொழிகிறார். இதிகாசங்கள், புராணங்கள் பற்றிய எளிய கதை நூல்களை வெளியிட்டு, குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை அனைவருக்கும் வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தலாம். இத்தகைய கண்டுபிடிப்புகள் வெற்றியடைந்தால், நிச்சயம் பிற மொழி எழுத்தாளர்களும் இதனைப் பின்பற்றி நூல்களையும் படைப்புகளையும் வெளியிடுவர்.

மலேசியாவில் இலக்கியா என்ற பதினான்கு வயதுடைய குழந்தை தமிழில் மட்டுமின்றி, ஆங்கிலம், மலாய் மற்றும் சீன மொழிகளில் மொழியாற்றலும் உள்ளவளாய் விளங்குகின்றனர். 1330 குறட்பாக்களையும், அவற்றின் பொருளையும் தெளிவோடு சரளமாக ஒப்பிக்கும் ஆற்றல் படைத்த இந்த இளந்தளிர் தேவாரம், திருவாசம் போன்ற திருமுறைப் பாடல்களையும் அற்புதமாய் மனனம் செய்து பாடுகிறாள். கலைமகள் இவளின் நாவில் நர்த்தனம் ஆடுகிறாள். இவளின் பேச்சாற்றல் அனைவரையும் மயக்குகிறது. இந்த இளம் வயதிலேயே முப்பதிற்கும் மேற்பட்ட பட்டங்கள் கிடைக்கப்பெற்று, மலேசிய மண்ணிற்கு மட்டுமின்றி உலகளவிலும் பாராட்டுகளும், பரிசுகளும் இவளுக்குக் குவிகின்றன. வள்ளுவர் இவற்றையே,

"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து
முந்தி யிருப்பச் செயல்" (குறள்: 67)

என்ற குறளுக்கு ஏற்ப இவளின் பெற்றோர், தமது கடமையைச் செய்துள்ளனர். இவளோ,

"மகன் தந்தைக்கு ஆற்றும்உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்".(குறள்:70)

என்ற குறளின் கருத்தை மெய்யாக்கியுள்ளாள், இவ்வளவு சிறுவயதிலேயே கலைமகளின் அருளைப் பெற்று, ஜொலிக்கும் இலக்கியா, இன்னும் தனது வாழ்நாட்களில் என்னென்ன இலக்கியச் சாதனைகள் செய்வாளோ..? பட்டங்கள் பெறுவாளோ? என எண்ணுகையிலேயே மனம் பூரிக்கிறது. முற்பிறப்பில் செய்த தவப் பயன்களின் விளைவால், இவள் பெற்றோர் அவளை மகளாக அடைந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. கல்வி ஒரு மனிதனின் அறிவுக் கண்களைத் திறக்கும் ஒளி தீபமாகும். கல்வி கற்ற சமுதாயமே முன்னேற்றமான சமுதாயமாயத் திகழ முடியும். கல்வியின் அவசியத்தை வலியுறுத்தவே தெய்வப் புலவர்.

"கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையவர் கல்லா தவர்". (குறள்: 393)

என மொழிந்துள்ளார். நம் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் கல்வியின் அவசியம் பற்றியும், அதனை முழுமையாகக் கற்காவிடில் ஏற்படும் விளைவுகள் பற்றியும், கல்வி கற்றால்தான் நம் சமுதாயத்திற்கு விடிவு காலம் பிறக்கும் என்பதையும் உணர்த்த வேண்டும். பல அறிவியல் கண்டுபிடிப்புகளை உலகிற்கு அளித்த தாமஸ் ஆல்வா எடிசன் பள்ளியில் சேர்ந்தபோது மூளைக் கோளாறு உள்ளவன் என்று ஆசிரியரால் பாட்டம் சூட்டப்பட்டு வீட்டுக்கு அனுப்பப்பட்டவர். பள்ளி ஆசிரியரான அவரின் தாயார்தாம் மகனுக்கு மூன்றாண்டுகள் கற்றுக் கொடுத்தார். பின்னர் சுயமாகவே அறிவியலின்பால் அவருக்கிருந்த ஈடுபட்டால் பலநூல்களைப் படித்தார். கணிதப் படிப்பில்லாத நிலையிலும் அறிவியல் கோட்பாடு எதுவும் முறையாகக் கற்காத நிலையிலும் சோதனைகள் மூலம் திரும்பத் திரும்ப முயன்று ஞான உக்தியால் பல அரிய நுட்பமான கருவிகளைப் படைத்துப் புகழ் பெற்றார்.இவரின் நூற்றுக்கணக்கான கண்டுபிடிப்புகளில் இசைத் தட்டுப் பேழை (புசயஅழிhழநெ), மின்குமிழி (நுடநஉவசi௨ டீரடடி), மின்னாற்றல் இயக்கி (பநநெசயவழச), திரைப்பட ஒளிப்படக் கருவி (ஆழஎநை ஊயஅநசய) போன்றவை தற்கால விஞ்ஞான உலகில் மனிதனுக்கு எண்ணற்ற அனுகூலங்களை நல்குகின்றன. முயற்சியும், ஆர்வமும் உடையவராயின் எத்தடைகளையும் நீக்கி, எண்ணியவற்றைச் சாதிக்கலாம் என்பது எடிசனின் வாழ்க்கை மூலம் அறியலாம்.

“எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்”. (குறள்: 666)

எனும் குறள் எண்ணியதில் உறுதி உடையவராக இருப்பவர், எண்ணியவற்றை எண்ணியவாரே சாதிப்பர் என்பதை உணர்த்துகிறது.

ரப்பர் உற்பத்தி

ஆங்கிலேயர்கள் மலேசியாவை நாட்டை ஆட்சி செய்த காலத்தில் ரப்பர் உற்பத்தியைப் பெருக்க வேண்டி, இந்திய நாட்டிலிருந்து தொழிலாளர்கள் கப்பல் மூலமாக இங்கு கொண்டு வரப்பட்டனர். இந்தியர்கள் ரப்பர் உற்பத்தி செய்ய நாட்டில் உள்ள பல தோட்டங்களில் வேலைக்கு அமர்த்தப்பட்டனர். இவ்விந்தியத் தொழிலாளிகள் நாட்டின் பல மாநிலங்களிலும் காடாகக் கிடந்த நிலங்களை அழித்து, ரப்பர் தோட்டங்களை உருவாக்கத் தங்களின் ரத்தத்தையும், வியர்வையையும் சிந்திப் பாடுபட்டனர். இந்தியத் தொழிலாளர்களின் கடுமையான உழைப்பினால்தாம், ரப்பர் உற்பத்திக்கு உலகில் சிறந்த இடத்தை நம் நாடு பெற முடிந்தது என்பது மறுக்கவியலாத உண்மையாகும். தோட்டங்களில் பயிர் செய்யப்பட்ட ரப்பர் உற்பத்திகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுபமதி செய்ய வேண்டிப் போக்குவரத்து வசதிகள் மேற்கொள்ளப்பட்டன. பல முக்கியத் தார்ச் சாலைகள், உழைப்பிற்கு அஞ்சாத நம் இந்தியத் தொழிலாளர்களின் உழைப்பினால் போடப்பட்டன. சில இரயில் பாதைகளும் அமைய இந்தியத் தொழிலாளர்கள் தங்கள் உழைப்பை அளித்துள்ளார்கள். இத்தகைய நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரத்தை உலக அளவில் உயர்த்துவதற்கு வழிகோலாய் அமைந்தன எனும் கூற்றை யாரும் மறுக்கவியலாது.

ஈயச் சுரங்கம்

மலேசியாவில் ஈயச் சுரங்கங்கள் அடையாளம் காணப்பட்டபோது, இவற்றில் வேலை செய்யச் சீனாவிலுள்ள தொழிலாளர்கள் அதிக ஆர்வம் காட்டினர். ஈயச் சுரங்கங்களில் வேலை செய்து, அதிக அளவில் ஈயத்தை ஏற்றுமதி செய்ய உதவிய சீனர்கள், தங்களின் உழைப்பால் நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தியதில் பெரும் பங்காற்றவும் செய்தனர். தோட்டப் புறங்கள் மேம்பாடு அடைவதற்காக அரசாங்கம் தொழிலாளர்களுக்குத் தங்குமிடம், மின்சாரம், குடிநீர், பள்ளி மற்றும் போக்குவரத்து வசதிகள் அமைத்துத் தர வேண்டுமெனத் தோட்ட முதலாளிகட்கு அறிவுறுத்தியுள்ளது. இத்தகைய வசதிகளில் திருப்தி அடையாமல், பட்டணங்களில் தொழில் செய்வதைக் கௌரவமாக எண்;ணி, பட்டணங்களுக்குப் படையெடுக்கின்றனர். நம் நாட்டுத் தொழிலாளிகள், இதனால் ஏற்படும்

வேலை வாய்ப்புகளை வெளிநாட்டுத் தொழிலாளர்கள் குறிப்பாக இந்தோனிசியத் தொழிலாளர்கள் பயன்படுத்திக் கொள்கின்றனர்.

இல்வாழ்க்கை

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் தொழிலாளர்களைக் கண்காணிக்க அமைக்கப்பட்ட 'மண்டோர்' வேலைகளைக் கூட அந்நியத் தொழிலாளர்கள் மேற்கொண்டு, அவர்களின் கீழ் நம் தொழிலாளர்கள் வேலை செய்வதைச் சில தோட்டங்களில் காணமுடிகிறது. இந்நிலை நீடித்தால் நாளடையில் எல்லாப் பொறுப்புகளையும் வெளிநாட்டவரே எடுத்துக் கொண்டு, உள்நாட்டவருக்கு வேலை வாய்ப்புகள் அளிக்காது போகும் நிலை ஏற்படலாம். தொழிற்சாலைகளில் பணிபுரியும் சில வங்காள தேசத் தொழிலாளிகள் அங்குள்ள பெண்களிடம் தங்களின் கைவரிசையைக் காட்டுகின்றனர். தங்களைத் திருமணமாகாதவர் எனக் கூறி இளம்பெண்களை மயக்கித் திருமணம் செய்துகொள்கின்றனர். ஆனால், இவர்களின் வேலை அனுமதிக் காலம் முடிவடைந்ததும், தாங்கள் திருமணம் செய்த பெண்களையும், அவர்களின் பிள்ளைகளையும் தவிக்க விட்டுவிட்டு, தங்களின் தாயகம் சென்று விடுகின்றனர். இத்தகையோரின் ஏமாற்றுத்தனத்தை அறிந்தும் பெண்கள் சிந்திக்காது. அவர்களின் ஆசை வார்த்தைகளில் மயங்கிச் சீரழிகின்றனர். பெண்களை ஏமாற்றிக் காதலித்துக் கை விட்டுச் செல்வது, திருமணமானபின் சில நாட்கள் குடும்பம் நடத்தியபின், தலைமறைவாகி விடுவது போன்ற சம்பவங்கள் நாட்டில் ஆங்காங்கே நடந்துள்ளன. திருமணமான பெண்கள் கூட வங்காள தேசிகளைத் தேடி, ஓடிய சம்பவங்களும் உண்டு. இவ்வாறு பாதிக்கப்பட்ட பெண்களும், அவர்களின் பிள்ளைகளும் சமுதாயத்தில் பல பிரச்சனைகளை எதிர் நோக்கி வாழ வேண்டியுள்ளது. சமுதாயமும் இவர்களை ஏளனப் பார்வையோடுதான் நோக்குகிறது.

வெளிநாட்டுத் தொழிலாளர்கள் இங்குள்ள பெண்களைத் திருமணம் செய்வதால், பலவித நோய்கள் பரவும் வாய்ப்புகளும் ஏற்படும், காசநோய், எய்ட்ஸ் மற்றும் பாலியல் நோய்கள் வெகு விரைவில் பரவி அப்பாவிப் பெண்களையும், குழந்தைகளையும் பாதிக்கும் நிலை ஏற்படலாம். இத்தகைய பிரச்சினைகள் தலைதூக்கின் அரசாங்கம் இவற்றிற்காக நிறையப் பணத்தைச் செலவு செய்ய நேரிடும். தமிழ் நாட்டில் இருந்து வேலை செய்வதற்காக, மலேசியாவிற்கு வந்த ஐம்பது அயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்களின் நிலை என்னவாயிற்று? என்பது தெரியவில்லை என அயலகத் தொழிலாளர் நல அமைப்பு கடந்த ஆண்டு செய்தியொன்றைப் பத்திரிக்கையில் விடுத்திருந்தது. இங்கு வேலைக்கு வந்த இந்தியப் பிரஜைகள், தாயகம் திரும்ப வழியின்றித் தவிப்பதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. தமிழக அரசம், இந்தியாவின் மத்திய அரசம் உரிய விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்க வேண்டுமென அந்த அயலக அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. கையிருப்புப் பணத்தோடு, நகைகள் மற்றும் நிலபுலன்களை விற்றோ அல்லது வெளியில் கடன் வாங்கியோ பணத்தைத் தரகர்களிடம் தந்து, இங்கு வந்து சம்பாதித்துக் கொள்ளலாம் எனப் பல கனவுகளைச் சுமந்து வருகின்றனர். தனி மனித முன்னேற்றமே நாட்டின் முன்னேற்றமாதலால், தனி மனிதன் சோம்பி இருத்தல் கூடாது. அவ்வாறு சோம்பி இருந்தால் தன் முன்னேற்றத்தை மட்டுமின்றி, தன் குடும்ப முன்னேற்றத்தையும், நாட்டின் முன்னேற்றத்தையும் அவன் பாதிப்படையச் செய்வான்.

"ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்கம் உடையா னுழை" (குறள்: 594)

என்ற வள்ளுவரின் கூற்று எண்ணத்தக்கது. சோர்வு இல்லாது, ஊக்கம் உடையவனிடத்தில் செல்வமானது, தானே அவன் உள்ள இடத்திற்கு வழி கேட்டுக் கொண்டு போய்ச் சேருமாம். பொன் விளையும் பூமியானாலும் நட்டப் பயிரைப் பாதுகாத்துக் களையெடுக்காவிடில் புதர்கள் மண்டிப் பயிர்கள் நலிந்து இருந்த இடம் தெரியாது அழிந்துவிடும். தமது சந்தததியினரை நாம் பாதுகாத்து

அதற்கான நடவடிக்கைகளை எடுக்காது வாளாவிருப்பின் அதன் விளைவும் இவ்வாறாகத்தான் அமையும் என்பதனை,

'வருமுன்னர் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்

வைத்தூறு போலக் கெடும்" (குறள்: 435) வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

தமது சமூகத்தின் வன்முறைப் பிரச்சினைகட்கு ஆய்வறிக்கைகள் தேவையில்லை இளையோருக்கு முழுமையான கல்வி, தேவையான வழிகாட்டல், வேலை வாய்ப்பு, வாழ்க்கைக் கல்வி பற்றிய போதனைகளை மேற்கொண்டால் நிச்சயம் அறிவார்ந்த ஒழுக்கமான, ஆரோக்கியமான சமுதாயத்தை நாம் உருவாக்கலாம் நம் நாட்டில் தற்போது நம் இந்தியரின் உயர்வுக்காகவும், விழிப்புணர்வுக்காகவும் நூற்றுக்கணக்கான அமைப்புகள் செயல்படுகின்றன. அமைப்புகள் செயல் படுகின்றன. மலேசிய இந்து இளைஞர் இயக்கம், தமிழ் இளைஞர் மணிமன்றம், இந்தியர் வர்த்தகச் சங்கம், இந்திய மேம்பாடு இயக்கம், இந்தியர் விளையாட்டு இயக்கம், திராவிடர் முன்னேற்றக் கழகம், மலேசியப் பண்பாட்டு இயக்கம் போன்றவை திறம்பட இயங்குகின்றன. இவற்றைத் தவிர மலேசிய இந்து சங்கம், மலேசிய சைவ சித்தாந்த சங்கம் போன்றவை சமய வளர்ச்சிக்காக பல்வேறு செயல்களைச் செய்து வருகின்றன.

மலேசியா சுதந்திரம்

மலாயா சுதந்திரம் பெற்றபின் மூவினங்களைக் கொண்ட கூட்டணிக்கட்சி, நாட்டை ஆட்சி புரிந்தது. அப்துல் ரஹ்மான் தலைமையிலான அரசு நல்லாட்சி புரிந்தது. அத்தருணம் மலாயாவிற்குத் தெற்கில் உள்ள சிங்கப்பூர், போர்னியோ தீவின் வட பகுதியில் இருந்த சாபா, சரவாக் ஆகியவை ஆங்கிலேயரிடமிருந்து சுததந்திரம் பெறாமல் இருந்தன. அப்துல் ரஹ்மான் இவற்றை மலாயாவோடு இணைத்து மலேசியா எனும் நாட்டை உருவாக்க எண்ணினார். பிரிட்டிஷ் அரசாங்கமும் அவ்வாறு செய்தால் சாபா, சரவாக், சிங்கப்பூர் ஆகியவற்றிற்கு விடுதலை தருவதாகக் கூறியது. பலமுறை பேச்சு வார்த்தைகள் நடத்தப்பட்டன. இம்மூன்று இடங்களில் இருந்த மக்களின் ஒப்புதலுக்குப் பின் 963 ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 16ம் நாள் மலேசியா உதயமாயிற்று. ஆனால் பின்னர் 1965 இல் சிங்கப்பூர் மலேசியாவிலிருந்து பிரிந்து தனி நாடாகியது. சுதந்திரம் அடைந்த வேளையில் கம்யூனிஸ்டுகளின் தொல்லையால் மலேசியா அதிகம் பாதிப்புற்றது. கம்யூனிஸ்டுகள் மலேசியாவைக் கம்யூனிஸ்டு நாடாக மாற்றத் திட்டமிட்டிருந்தனர். 1953 இல் மலேசிய உருவாகி தீபகற்ப மலேசியா, சாபா, சரவாக் ஆகியவற்றின் பலங்களும் ஆற்றலும் ஒன்று திரட்டப்பட்டு, கம்யூனிஸ்டுகளின் தாக்குதல்களைப் பலவித நடவடிக்கைகளின் மூலம் முறியடித்தது.

மலாயா தேசிய இயக்கமான அமனோவும் சீனர் சங்கமான எம்.சி.ஏவும், இந்தியர் காங்கிரசும் இணைந்து கூட்டணிக் கட்சியாகச் செயல்பட்டு நாட்டின் சுதந்திரத்திற்குப் பாடுபட்டன. கூட்டணிக் கட்சி பின்னர் பாரிசான் நேசனல் எனும் தேசிய முன்னணிக் கட்சியாகச் செயல்படத் தொடங்கியது. ஆரசியலின் வலுவான அமைப்பால் நாட்டின் சுதந்திரம் நிலைநாட்டப்பட்டு வருகிறது. இப்பொழுது மலேசியா மலாய்க்காரர், சீனர், இந்தியர், இபானியர், கடஜான் போன்ற பல்லின மக்களைக் கொண்ட சிறந்த மக்களாட்சி நாடாக விளங்குகிறது. இன ஒற்றுமைக்கு உலக அளவில் எடுத்துக் காட்டாய் விளங்கும் மாபெரும் சிறப்பு வாய்ந்த நாடாய்த் திகழ்கிறது. மலேசியா தொழில் துறையில் மாபெரும் வளர்ச்சிகளைப் பெற்று வருகிறது. அரசாங்கக் கொள்கைகள், பொதுநல வசதிகள், பாதுகாப்பு வசதிகள், மற்றும் வேலைகள் செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் 2020ஆம் ஆண்டுக்குள் மலேசியாவைத் தொழில் வளம் கொண்ட நாடாக மாற்ற அரசாங்கம் இலட்சியத்தை அமைந்துள்ளது. மிடா எனும் மலேசியத் தொழில் துறை வளர்ச்சி வாரியம் நாட்டில் பல தொழிற்சாலைகள் உற்பத்தியாகவும், வளர்ச்சி பெறவும், பல நடவடிக்கைகளைச் செய்து வருகிறது.

மலேசிய உற்பத்திப் பொருட்களின் ஆய்வுக் கூடம் நாட்டில் உற்பத்தியாகும் பொருட்களை ஆய்வு செய்து அதிகரிக்கவும், இப்பொருட்கள் தரமாக இருப்பதை உறுதிப்படுத்தவும் வேலைகள் செய்து வருகிறது. ஆஐனுயு என அழைக்கப்படும் மலேசியத் தொழிற்சாலைகள் நிதி வளர்ச்சி நிறுவனம் நாட்டில் உற்பத்தியைப் பெருக்க, பெரிதும் உதவுவதோடு தொழில் பேட்டைகள் அமைக்கவும், உற்பத்திப் பொருட்களுக்கான நிதி உதவிகளை வழங்கியும் தொழிற்சாலை நடத்துவதற்கான சிறந்த ஆலோசனைகளை வழங்கவும் பங்காற்றுகிறது. அண்மை ஆய்வு ஒன்றில் மலேசியாவில் தற்போது சுமார் 18 இலட்சம் அந்நியத் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என அறியும் போது தொழில் துறையின் வளர்ச்சி மிக அதி வேகமாகப் பெருகுகிறது என்பதை உணர முடிகிறது.

போக்குவரத்து

மலேசியா பல துறைகளில் வளர்ச்சியடைய போக்குவரத்து, தொடர்புத்துறை வசதிகள் முக்கியப் பங்காற்றுகின்றன. மேற்கு மலேசியாவிலும், கிழக்கு மலேசியாவிலும் சாலை, ரயில், ஆகாயம், கடல் மற்றும் நதிகளின் போக்குவரதது மிகச் சிறப்பாக விளங்க அரசாங்கம் பல கோடி ரிங்கிட்டைச் செலவு செய்து வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் மக்களின் வாணிபம், சுற்றுப் பயணம் மற்றும் கல்வி மேம்பாடு கண்டு, வாழ்க்கைத் தரமும் மேலோங்கியுள்ளது. தொலைப்பேசி, தபால், வானொலி, இணையம் போன்ற வசதிகளும் மக்களுக்குத் தகவலகள் உடனுக்குடன் அறியவும், கற்றல், பொது அறிவு, வாணிகம், சுற்றுப் பயணத் துறைகள் சிறந்த வளர்ச்சியடைய உதவுகின்றன. பலபோடி ரிங்கிட் செலவில் அமைக்கப்பட்டுள்ள நெடுஞ்சாலைகள் நாட்டின் போக்குவரத்து மேம்;பாட்டிற்குப் பெரிதும் தோள் கொடுக்கின்றன. தமிழ்நாட்டில் திண்டுக்கல்லில் உள்ள அறக்கட்டளை இயக்கத்தினர் மறு சுழற்சி செய்யப்பட்ட கைவினைத் தாட்களைப் பயன்படுத்திப் பல்வேறு வண்ணங்களிலும், வடிவங்களிலும் கலைத்திறன் மிக்க வாழ்த்து அட்டைகளும், பொருட்களும் உருவாக்குகி;ன்றனர். இதன் வருவாய் அங்குள்ள கிராமப்புறப் பெண் சுயமரியாதையுடன் வாழ உதவுகிறது.

மறு சுழற்சி நடவடிக்கையில் காகித உற்பத்தி முதன்மை வகிக்கின்றது. ஜப்பானியரின் ‘ஒரிகாமி’ எனப்படும் காகிதங்களை மடித்துப் பலவித உருவங்களைச் செய்யும் முறையும் வினோதமான பட்டங்கள் செய்யும் முறையும் மிகவும் பிரசித்திப் பெற்றவை. நாம் இம்மாதிரியான காகித உருவாக்கங்கள் செய்யும் முறைகளில் மாற்றங்கள் செய்து தம் நாட்டுப் பல்வேறு பாரம்பரியக் கலாச்சாரத்திற்கேற்ற படைப்புகளை உருவாக்க முனையலாம். தொழில் நுட்பத்தின் துணையுடன் மாபெரும் புதுமைகள் செய்து சாதனை படைக்கலாம். பல நாடுகளின் வெற்றிக் கண்டுபிடிப்புகளைக் காணும்போது அந்நாட்டு அரசாங்கம் காட்டும் ஆதரவும், ஊக்கமும் இவற்றிற்கு உந்து சக்தியாக அமைந்துள்ளதைக் காண முடிகிறது. இதனைக் கருத்தில் கொண்டு நமது அரசாங்கமும் மறுசுழற்சி மையங்களை அமைக்கும் நடவடிக்கைகளில் தீவிர ஆர்வம் காட்டவேண்டும். கைவினைத் தொழிலில் ஆற்றலும், ஆர்வமும் படைத்தோரைத் தேர்ந்தெடுத்து, வெளிநாடுகளுக்கு அனுப்பி மேலும் தகுந்த பயிற்சிகளைப் பெற்றுவர ஆவண செய்யலாம். இம்மாதிரிப் பயிற்சி பெற்றோரை முன்னோடியாக வைத்து இங்குள்ள மற்ற ஆர்வலர்களுக்குப் பயிற்சிகள் வழங்கி இத்துறையில் மேம்பாடு அடையலாம்.

முடிவுரை

எழுமின் விழிமின் என்ற கட்டுரைத் தொகுப்பில் எட்டுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மிகத் தெளிவாக வெவ்வேறு தலைப்புகளில் நூலாசிரியர் தெளிவுபடுத்துகிறார். குறிப்பாக நமது நாட்டில் பள்ளிகளின் நிலைமையும் எதிர்காலமும், நாட்டின் வளர்ச்சிக்கும், வளப்பங்களுக்கும் தமிழ் எழுத்தாளர்களின் பங்கு, மலேசிய இந்திய இளைஞர்கள் 2020க்குள் எந்தத் துறையில் தங்களை வளர்;த்துக் கொள்ள முடியும், வெளிநாட்டுத் தொழிலாளர்களால் ஏற்படும் விளைவுகள், எழுமின்

Article DOI: https://doi.org/10.63300/tm12032026.17

விழுமின், 60 ஆண்டுகளில் மலேசியாவின் வளர்ச்சி, எதிர்கால நிதி நிர்வாகம், பயனீட்டாளர்களிடையே மறு சுழற்சி நடவடிக்கையினை எவ்வாறு ஊக்குவிப்பது முதலிய தலைப்புகளில் மிகத் தெளிவாக நாடு எதிர்கொள்ள வேண்டிய சவால்கள், மொழி வளர்ச்சி, எதிர்நோக்கல்கள், வளர்ச்சி முதலியவற்றை மையப்பொருண்மையாக வைத்து மிகத் தெளிவாக விளக்கியுள்ளதை மேற்கூறியவற்றின் வாயிலாக அறிய முடிகிறது.

பார்வை நூல்கள்

[1]. இரா. லோகம்பாள், எழுமின் விழிமின். இனிய நந்தவனம் பதிப்பகம், உறையூர், திருச்சி 620 003, முதல்பதிப்பு 2021

[2]. ஆ. கார்த்திகேயன், சா. ஊதயசூரியன்(ப.ஆ), சிங்கப்பூர் மலேசியத் தமிழ் இலக்கியம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், முதல் பதிப்பு 2010.

[3]. முல்லை இராமையா, மலேசியா கட்டுரை இலக்கியம், மலேசியா, முதற்பதிப்பு 2007

[4]. முரசு. நெடுமாறன், மலேசியத் தமிழரும் தமிழும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை. முதற்பதிப்பு 2007

[5]. பிள்ளை கா.சு.(உரை.), 2012(மூ,ப.), திருக்குறள், சாரதா பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு 2012

Reference Books

[1]. R. Logambal, *Ezhumin Vizhimin* [Arise, Awake], Iniya Nandhavanam Pathippagam, Uraiyur, Trichy 620 003, First Edition 2021.

[2]. A. Karthikeyan & Sa. Udhayasooriyan (Eds.), *Singapore-Malaysia Tamil Literature*, Tamil University, Thanjavur, First Edition 2010.

[3]. Mullai Ramaiyah, *Malaysian Essay Literature*, Malaysia, First Edition 2007.

[4]. Murasu Nedumaran, *Malaysian Tamils and Tamil*, International Institute of Tamil Studies, Chennai, First Edition 2007.

[5]. Pillai Ka.Su. (Comm.), *Thirukkural*, Saradha Pathippagam, Chennai, First Edition 2012.